]திரு. தேனி பன்னீர் செல்வம்] [1994 ஏப்ரல் 19

நம்முடைய மாநில அரசினுடைய இறையாண்மைக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

9. டாக்டர் புரட்சித் தலைவி குழந்தைகள் 15 அம்சத் திட்டம் பற்றி யூனிசெப் நிறுவனம் அளிக்கும் பயிற்சியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உறுப்பினர்களுக்கு சமூக நலத் துறை அமைச்சர் வேண்டுகோள்.

பிற்பகல் 4—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க வேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறேன். இப்போது அவர் தன்னுடைய வேண்டுகோளை அவைக்கு விடுப்பார்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேண்டுகோளை விடுக்க அனுமதித்ததற்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் எண்ணத்தில் உருவான குழந்தைகளின் உயர்விற்காக டாக்டர் புரட்சித் தலைவி குழந்தைகள் 15 அம்சத் திட்டம் இன்றைக்கு உலகின் பல்வேறு நாடுகளால் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் இன்றைக்கு இத்திட்டத்தினை பற்றிய தகவல்களைக் கேட்டறிந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தெளிவாகத் தெரிந்துகொண்டு தன்னுடைய தொகுதியில் உள்ள குழந்தைகளுக்கு அரசின் மூலமாக இதனுடைய முழுப் பயனையும் பெறக்கூடிய வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்புவதால் இந்தியாவிலேயே முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதற்கான பயிற்சி அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அன்போடு யூனிசஃப் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 22-ந் தேதி மாலை 6 மணி அளவில் யூனிசஃப் நிறுவனம் அடையார் பார்க் ஷெராட்டன் ஓட்டலில் இந்த பயிற்சிக்குரிய ஏற்பாட்டைச் செய்துள்ளது. அதனை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் முழுவதுமாக பயன்படுத்திக்கொண்டு

அதில் ஒவ்வொருவரும் கலந்துகொண்டு தங்களுடைய தொகுதியில் குழந்தைகளுக்கு இந்த 15 அம்சத் திட்டத்தின் மூலமாக அரசு என்ன என்ன உதவிகளைச் செய்கிறது என்பதை அறிந்து அதை அரசு மூலமாக பெற்றுத் தருவதற்கும், குழந்தைகளுடைய நலனை ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினரும் தனித்தனியாக கவனித்துக்கொள்வதற்கும் இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு அந்தப் பயிற்சி நேரத்தில் யூனிசஃப் நிறுவனம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு — பரிதி இளம்வழுதி எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை போல அறு சுவை உணவையும் வழங்குகிறார்கள் என்ற நல்ல தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசினர் சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்)
தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவு
(சட்ட முன்வடிவு எண். 10/1994),

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 73 ஆவது திருத்தத்திற்கு ஏற்றவாறு 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தை நீக்கிவிட்டு இங்கே கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவின் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவில் பேசிய அனைத்து உறுப்பினர்களும் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள். எனவே நான் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன் என்பதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் கூட அறிவுறுத்துகின்ற நேரத்திலே, இது இந்தியாவினுடைய அரசியல் அமைப்பு சட்டத்தில் 73-வது திருத்தத்திற்கு ஏற்றவாறு இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமுன்வடிவு. இதிலே அந்த உட்கூறுகளுக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற உட்கூறுகள் எங்கே பாதகமாக இருக்கிறது என்பதை மட்டும் சொல்ல வேண்டும் என்று தாங்களே கூட அறிவுறுத்தினீர்கள். என்னைப் பொறுத்தவரையிலே இந்த சட்டமுன்வடிவிலே இருக்கின்ற உட்கூறு களை பொறுத்து சொல்ல வேண்டிய இதிலே ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு உட்கூறு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தியே ஆக வேண்டும் என்று இருக்கின்ற